கடலே, சீறாயோ?

தனித்திருந்த செந்தமிழ்த்தாய் அரசிருக்க,
  தகுவேந்தர் நிழற்கீழ் தங்கி,
இனித்திருந்த தமிழகத்தை விழுங்கினையே
  இருங்கடலே! எவர்சொன்னாலும்
இனித்திருந்தார்; இழிவகற்றார்; இனியுய்யார்;
  எந்தமிழர் இந்த நாளில்!
முனித்தெழுந்து சீறாயோ? மூழ்க்காயோ?
  முன்வினைக்குக் கழுவா யென்றே

17—11—59

ஆசிரியர்
பெருஞ்சித்தி

25
காசுகள்

கட்டுரை, கதை, பாட்டு எழுதுவார் கருத்துக்கு.

தென்மொழிக்கு அன்பர், மாணவர் பலரிடமிருந்தும் கட்டுரை, கதை, பாட்டு முதலியன அளவிறந்து வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் அளவு கண்டு மகிழ்வும், உட்பொருளும், நடையுங் கண்டு வருத்தமும் அடைகின்றோம். வருகின்ற உருப்படிகளுள் பாட்டுக்களே மிகுத்திருக்கின்றன. அவை முற்றும் பிழைபட்டிருப்பதுடன், உயர்வான கருத்துக்களையும், தம்முட் கொண்டிராமல் விளங்குகின்றன. சிலர் அளவிறந்த பக்கங்களில் எழுதிக் குவித்திருக்கின்றனர். தென்மொழியில் மூன்று நான்கு பக்கங்களுக்கு மிகாமல் எழுதுமாறு அவரைக் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அவர் கீழ்வருவனவற்றையும் கருத்திற்பதிக்க வேண்டுகின்றோம்.

1. மாணவரும், பிறரும் எழுதும் உருப்படிகளை ஆங்காங்குள்ள நல்ல தமிழ் ஆசிரியரிடமும், தமிழ் அறிஞரிடமும் காட்டிச் செம்மை செய்யப்பெற்று அனுப்புதல் வேண்டும்
2. அனுப்பியவுடனேயே தென்மொழியில் வராமையால் கவலுற வேண்டாம். நல்ல உருப்படிகள் காலந் தாழ்ந்தேனும் உறுதியாய் வெளிவரும்.
3. தென்மொழியில் வராதனவும், திருப்பிப்பெறப் போதிய அஞ்சற்றலை வைக்கப்பட்டனவும், உடனுக்குடனன்றியேனும், எவ்வாறுயினும் அவற்றை எழுதிய ஆசிரியர்க்கு வந்தே தீரும்.
4. அவைபற்றிய எவ்வகை மடலும் எழுதப்படமாட்டாது.
5. அச்சுக்கு வராக் கட்டுரை, கதை, பாட்டு அத்தனையும் காக்கப்படுகின்றமையால், முன்னுல் அஞ்சற்றலையனுப்பத் தவறியவரும் பின்னுல் அனுப்பி அவற்றைத் தருவித்துக் கொள்ளலாம்.
6. நல்ல தமிழில், நல்ல கருத்துப்பற்றி, எழுதப்பட்ட கட்டுரை, கதை, பாடல்களே வெளிவரத்தக்கன.

— ஆ. ர்.

கருத்திற் பதிக்க.

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை பாடல்களின் கருத்துக்களும், பெயர்களும், அவற்ருல் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர் தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

— ஆசிரியர்.

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் ௧	திருவள்ளுவராண்டு ௧௯௯௦ கார்த்திகைத்திங்கள் ௧. (17–11–59)	இசை ௮

நாடும் இலக்கியமும் - 2

சேன்ற இசையில் மாந்தன் பொழுதுபோக்கிற்கு இன்றியமையாததும், அவன் வாழ்க்கைக்குத்துணை நிற்பதும், அவன் வாழ்வுத் தொல்லைகளாற் சோர்வுறுங் காலத்தே, அவன் உள்ளத்தை ஊக்கி இன்பத்தே ஆழ்த்துவதும், ஒரு நாட்டின் இலக்கியமே என்பதுபற்றியும், அவ்வாறான சிறப்புற்ற இலக்கியம் என்று பேசத்தகுந்த நூற்களின் தன்மைகள் பற்றியும், அவற்றின் தேவைபற்றியும் கூறினேம். ஈண்டு இத்தகைய இலக்கியங்கள் செறிந்த தண்டமிழ் நாட்டின் சிறப்பையும், அவை இறந்துபட்டமையையும், அவற்றை மீண்டும் எழுப்பித்தரவல்ல வழிகள் பற்றியும் கூறப் புகுவேம்.

நமக்குக்கிடைத்த இலக்கிய நூற்களைக் காலமுறைமையிற் படித்துப் பார்க்கின் காலத்தால் **முந்திய இலக்கியங்கள்** இயற்கை இன்பங் காட்டுவனவாயும், இயற்கையோடு பொருந்துவனவாயும், மொழிக்கலப்பற்றனவாயும், தெள்ளிய தீந்தமிழ் நடை யுள்ளடக்கியனவாயும், சாதிப்பிரிவுகளால் மோதி முறிவுண்டு போகாதனவாயும், சமயக் கொள்கைகள் ஆழ்ந்தமையாதனவாயும், மக்கள் வாழ்க்கைமுறை யொன்றே குறிக்கோளாய் எழுந்தனவாயும் அமைந்திருப்பதும், அவற்றிற்குப் **பிந்திய காலத்தே** வரவர, இயற்கையொடு பொருந்தா பொய்மைப் புன்கூற்றுக்கள் மலிந்தனவாயும், உள்ளத்தே எழுகின்ற தீயுணர்வுக்கு நெய்யூட்டி வளர்ப்பனவாயும், மொழிவளங்குன்றி, சொற்களின் எழில்குன்றிப் பொருள்திரிந்து கலப்புற்றனவாயும், வறிதே எழுத்துப்புணர்ச்சிச் சொற்புணர்ச்சிக் கிடந்தந்து அணி ஆரவாரங்களென்னும் பாட்டுநடையால் பருமை பெற்றிழிந்த

கருத்துக்களை இயம்புவனவாகவும், சாதிச் செருக்குகளின் முடைநாற்றம் வீசுவனவாகவும், சமயப் பெரும் போராட்டப் பொருகளங்களாகவும், அறிவின்பம் வேண்டாது புலனின்பம் ஒன்றே குறிக்கோளாய்த் தோன்றியனவாயும் அமைந்திருக்கவும் காணலாம்.

இவ்வாறு திகழ்ந்து தேய்ந்து திரிந்தழிந்து போயின மைக்குக் காரணம் என்னேயோவென்னின், முற்காலத்துப் போலன்றிப் பிற்காலத்தே சான்றோர் அருகினமையும், வாய் மைப் பயிற்சி குறைந்தமையும், வெறும் அறிவுணர்வேயன்றி, உள்ளத்துணர்வில் மக்கள் நாட்டஞ் செலுத்தாமையும், சமயப் பித்தர்தம் அமையாக் கொள்கையும், சாதிச்செருக்கரின் தீமைச் செயல்களும் பாகுபாடுகளுமேயாம் என்க.

தந்நலப்பெருக்கினால் ஒவ்வொருவர் உள்ளமும் குறுகிக் குமைந்து போனது. தம்மினம், தம்வீடு, தம்முறவு, தம்மக் கள்,என்பனவோடே மக்கள் அமைந்தனர். நாடும், மொழியும் தம்முடைமையல்ல என்று வாளாவிருந்தனர். 'இராமன் ஆண் டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' என்று நாட்டுக் கவலையின்றி மக்கள் மாக்களாய் வாழ்ந்தனர். இந்நிலையில் விழிப்போடிருந்தோர் மொழிப்பற்றுடனும் இனப்பற்றுடனும் வாழ்ந்து, உறங்குவோரை நசுக்கினர். இந்த நிலை வரவர 'கொள்ளு குன்றமானதுபோல்' வளர்ந்து ஈண்டு நாட்டில் நல் லறிஞர் தம்உள்ளக்கவலைக்குப் பெருங் காரணமாய்ப்போனது.

நம் முன்னோர் கூறிய அறிவுரைகள் நமக்கே பயன்படா மற் போயின. திருக்குறள், நாலடியார் முதலிய நெறிநூல்கள் வல்லார் வாய்க்கு வரகாக அமைந்தன. நாம் கண்ட இலக்கியங் களுக்கும் நாம் காண்கின்ற வாழ்க்கைக்கும் ஒரு பெரிய இடை வெளி வீழ்ந்தது. இவற்றை உய்த்துணராமல் பண்டைப் புகழ் பாடி, வெறும் பெருமை காட்டிப் பேசுவார், வாய்ப்பேச்சால் வலிகண்டு போவாரேயன்றி வேறு எதனையும் காணார்.

இவற்றை ஆழ்ந்து காணமல் இலக்கிய வளர்ச்சிக்கு நாமே எரு என்று தருக்கிப் பேசுவார்பற்றி யாம் கூறவேண்டுவ தொன்றும் இல்லை.

நல்ல இலக்கியங்கள் நல்லோரின் நல்ல எண்ணங் களாம். அவற்றைக் கற்பதோடமையாது கற்றவாறு நிற்கவும் வேண்டும். அவ்வாறு நிற்காமற் போவரேல் 'கற்றேம்' என் பாரும் 'கற்கிலேம்' என்பாரும் ஒரே ஆற்றில் ஊற்று வெட்டி யவரே ஆவர்.

இலக்கியங்களெல்லாம் நாட்டு வளர்ச்சிக்குப் பயன்படு வனபோன்றே மொழிவளர்ச்சிக்கும் பயன்படுவனவாகும். ஒரு

வர்க்கிருக்கும் மொழித்திறன் வளர இலக்கிய ஈடுபாட்டைப் பெருக்கிக்கொள்ளலும், இலக்கியத்திறன் வளர மொழியறிவைப் பெருக்கிக் கொள்ளலும் வேண்டுவதாகும்.

இனி இலக்கியங்களெல்லாம் மொழிச் சிறப்புடையனவாகலின் அவற்றைத் தாழ்ந்த நிலைக்கு உட்படுத்தக் கூடாதென்பரும், உயர் கல்வி கற்றவர்க்கே யன்றிச் சிறிதளவு கற்றவருக்கும் பயன்படுமாறு இலக்கியங்கள் அமைதல் வேண்டும் என்பரும் இக்காலத்தே உளர். இக்கூற்றுக்களையும் ஆய்வோம்.

பொதுவாக ஓர் ஆங்கிலச் சொற்பொழிவாளர் அளவிறந்த ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுவதனாலும், இலக்கிய நடையை இடையீடு செய்வதனாலும் சிறப்பாகக் கருதப்படுகின்றமையை எவருங் காணலாகும். "என்னே! அவர் திறன். ஆங்கில நூற்களை அளவிறந்து கற்றிருக்கின்றார்?" என்று வியப்பார் பலர். ஆயின், தமிழ் இலக்கிய விரிவுரை செய்வார், ஐந்தாறு தூய தனித்தமிழ்ச் சொற்களைக் கூறிய நிலைமையிலேயே "இவர் மிகக் கற்றார்ப்போல் வறிதே கடுந்தமிழைப் பேசிக் கொடுமை செய்கின்றார்" என்று பேசுவர் எண்ணிறந்தோர்.

மூன்றடியும், நான்கடியும், ஐந்தடியும், ஐந்தரையடியாயுமுள்ள மாந்தர் தமக்கொரு வீட்டைக் கட்டுங்கால், உள்ளே புகவும் வெளியே வரவும் வழியாய நுழைவாயிலை அவரவர்க்குத் தகுந்த அளவுகளில் வைத்துக் கொள்கின்றாரோ? அன்று அன்று. மூன்றடி உள்ள குள்ளர் தம் நுழைவாயிலை மூன்றடி உயரமும், நான்கடி உள்ள நடுமையர் தம் நுழைவாயிலை நான்கடி உயரமும், ஐந்தடி, ஐந்தரையடி உள்ள நெடுமையர் தம் நுழைவாயில்களை ஐந்தடி,ஐந்தரையடிகளிலும் அமைப்பதை யாம் யாண்டும் காண்கிலேம். மாந்தர்க்குள் நெடுமையளவு என்னையோ அந்த அளவிலேயே புகவும் வரவுமான நுழைவாயிலை அமைக்கின்றேமா? இல்லையா? அது அவ்வாறுயின் மொழிநிலையும் அவ்வாறே.

மூன்றும் படிவமே படித்துள்ளான் ஒருவற்குத் தகுந்தவாறே இலக்கியம் அமைந்தால், ஐந்தாம் படிவம் படித்தான் ஒருவன் அதனை இகழானோ? இனி ஐந்தாம் படிவம் கற்றுள்ளான் ஒருவற்குத் தகுந்த இலக்கியம் கல்லூரியிற் படிக்கும் மாணவற்கு இன்பந்தருமோ? இவ்விடர்ப்பாடுகட்கெல்லாம் தகுந்தவாறு இலக்கியத்தை ஏற்றவுந்தாழ்த்தவும் செயின் மொழி "கோரைக்கால் ஆழ்வான் கொடை போன்று, கரியாய்ப் பரியாக் காட்டெருமை தானாய்ப், புரியாய் முழப் புடவையாகித் திரியாகித் தேய்ந்து போகாதோ?

இவையெல்லாம் நன்கு ஆய்ந்து கண்டே கையெட்டிய போதெல்லாம் கனிவீழ்தலாயின் துன்பங் காணுமையின் இன்ப மும் காணுதவராய்ப்போவர் என்று கொண்டு இலக்கியம் ஒரே யொரு தனித்தநிலையில் இயங்குதல் வேண்டும் என்று இலக்கண அரண்காட்டிப் போயினர் புலவோர். இவை யுணராது வெற் றுணர்வே மிகப்பெற்ற கற்றறியார் ஒருசிலர் இலக்கியம் எளிய நடையிலும், கல்லாமக்கட்கும் புரியும் நடையிலும், இயங்க வேண்டும் என்று சிற்றுரை கூறுவர். அவர் உரை அவர் ஆழ்ந்து கற்றவரல்லர் என்பதையும் அவர் திறனின்மையுமே காட்டுவனவன்றி நம்முரைக்கு மாற்றங்காட்டா என்க.

இனி இலக்கிய வளர்ச்சியே மொழிவளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சியே நாட்டு வளர்ச்சிக்கும், நாட்டு வளர்ச்சியே மக்கள் வாழ்க்கைக்கும் வழிகாட்டுவனவாம். இத்தகைய மொழி வளர்ச்சி ஈண்டு அறவே இல்லை என்னலாம்.

ஒருகால் ஒரு புகைவண்டிநிலைய புத்தகக் கடையில் நின்றிருந்தேம். அக்காலை இரண்டு மூன்று கல்லூரி மாணவர் அங்கு வந்து நின்றனர். அவருள் ஒருவர் மற்றவர்க்குப் புதிதாக மலிவு விலையில் வெளிவந்த திருக்குறள் ஒன்றைக்காட்டி வாங்க வேண்டினர். அதைக்கேட்ட மற்றவர் எள்ளி நகையாடி, "இதுபோன்ற பழங்கால நூல்களை இன்னும் வாங்கி வைத்துக் கொண்டிருந்தால், நம்மைக் கல்லூரியிற் பயிலும் மாணவர் என்று பிறர் கருதுவரோ?" என்று அடாதசொற் கூறினர். யாம் இதுகேட்டுக் கொதி நெய் பெய்த செவியராயும், எரிமூண்ட நெஞ்சினராயும், கொதிப்புற்ற குருதியினராயும், ஆனேம். எம் நிலைக்கு அப்புல்லியர் முன் ஏதுஞ் செய்தல் தகாதென்றெண்ணி புழுங்கிய நெஞ்சொடு வீடு புகுந்தேம். தமிழ் மொழியைக் கட்டிக்காக்கும் மாணவர் இவ்வாறு போயின் நாம் செய்வது யாதுளது? அறிவோரே கூறுமின்.

திருக்குறளே இந்நிலையிற் றாழ்ந்துபோயின் மற்றை நூல்கள் எங்ஙன் அவ்வுருவங்கட்குப்படுமோ? அறியேம். இத் தகைய கீழ்த்தகவான நிலைக்குப் போதிய இலக்கியப் பயிற்சி யின்மையே பெருங்காரணமாம் என்க.

ஆகவே நல் இலக்கியப் பயிற்சியே மனத் தூய்மைக்கும், மொழி வளர்ச்சிக்கும், ஒற்றுமை மனப்பாங்கிற்கும், நாட்டு வளத்திற்கும், உலக அமைதிக்கும் அடிப்படையானது என் பதை அறிந்தோர் அறிவர்.

எனவே, அறிவுள்ளவரே, நமக்குக் கிடைக்கும் ஓய்வுக் காலங்களைப் புன்மை உணர்வூட்டும் கேளிக்கைகளிலும், வெற்று ஆரவார மேனி மினுக்குகளிலும் கழிக்காது, நல்லன எண்ணி, நல்லன ஆற்றி, நல்லன எய்த முயல்வீராக என்று முடிக்கின்றேம்.

○

தமிழில் பழமொழிகள்.

பண்டாரகர் (டாக்டர்) மா. இராசமாணிக்கனூர், எம்.ஏ., எம்.ஓ.எல்

பழமொழிகளின் தோற்றம்:

கூத்தனும், சாத்தனும் நண்பர் ஆவர். ஒருநாள் அவர் இருவரும் ஒரு வீட்டிற்கு உணவு உண்ணச் சென்றனர். உண்ட பிறகு இருவரும் சேர்ந்து வந்துகொண்டிருந்தனர். கூத்தன் சாத்தனிடம் தான் விருந்துண்ட வீட்டிலிருந்து திருடிக்கொண்டு வந்த கைநெளியை (மோதிரத்தை)க் காட்டினுன்; தான் எடுத்து வந்த வகையையும் சொன்னுன். சாத்தன் அதுகேட்டு மிக்க வருத்தமும் சீற்றமும் அடைந்தான்; **"கூத்தா, அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா?"** என்று மனவருத்தத்தோடு கேட்டான்.

இவ்வாறு சாத்தன் "அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா?" என்று சொன்னது நாளடைவில் மக்கள்பாற் பரவியது. அது பொருத்தமான—பொருள் பொதிந்த தொடராக இருந்ததால், மக்கள் உள்ளங்களில் பதிந்தது. எந்தக் காலத்தில் சாத்தன் இதைச்சொன்னுன் என்பது யாருக்கும் தெரியாது. ஆனுல் இன்று அது மக்கள் பேச்சு வழக்கில் இருக்கிறது. இது காலப்போக்கில் அறிஞர்களின் நூல்களிலும் இடம்பெற்றுவிட்டது. இது எப்பொழுதோ சொல்லப்பட்டது; ஆதலால் **பழமொழி** (பழைய மொழி) என்ற பெயரும் பெற்றுவிட்டது. இப்பழமொழி இவ்வாறு ஒரு நிகழ்ச்சியிலிருந்து பிறந்தது என்று சொல்லலாம்.

2. நான்கு பெயர் ஒருவர் வீட்டிற்குச் சென்றனர்; அவ் வீட்டுக்காரருடன் பேசிப் பொழுது போக்கினர். நால்வருள் ஒருவன், வீட்டுக்காரர் மாடத்தில் வைத்திருந்த சிறிய பணப்பையை எடுத்து மறைத்து வைத்துக்கொண்டான். சிறிது நேரம் கழித்து வீட்டுக்குரியவர் ஏதோ வாங்குவதற்காகப் பணம் எடுக்க மாடத்தைப் பார்த்தார். அங்குப் பணப்பை இல்லை. அவர் முகம் வாடியது. அந்த நால்வருள் ஒருவன்தான் எடுத்திருக்க வேண்டும் என்று தன்னுள் எண்ணினுர்; ஆயினும் அது பற்றி எவ்வாறு கேட்பது என்று விழித்தார்.

அவருடைய முகவாட்டத்தையும் அவர் தயக்கத்தையும் கண்ட நால்வருள் ஒருவன், "ஏன் உங்கள் முகம் மாறிவிட்டது? என்ன செய்தி கூறுங்கள்," என்று துடிப்போடு கேட்டான். மேலும் இருவர் அவ்வாறே துடிதுடித்துக் கேட்டனர். பையைத் திருடியவன் மட்டும் வாயைத் திறக்கவேயில்லை.

அப்போது வீட்டுக்காரர், "நண்பரீர், இந்த மாடத்தில் ஒரு சிறிய பணப்பை வைத்தேன். நீங்கள் இங்கு வந்தபிறகும் அது இந்த மாடத்திலேயே இருந்தது. இங்கு வேறு யாரும் வந்ததில்லை. அப்படி இருந்தும் அது காணப்படவில்லை. இதை உங்களிடம் எப்படிச் சொல்வது என்றுதான் தயங்கினேன்," என்று விட்டு விட்டுப் பேசினர். அந்நால்வருள் ஒருவன் மிகுந்த பரபரப்போடு "என்ன வியப்பு! நாங்கள் தவறுகக் கருதமாட்டோம். எங்களுள் ஒவ்வொருவரையும் ஆராய்ந்து விடுங்கள்," என்று கூறினன். அவனைப் பின்பற்றி மற்ற இருவரும் அவ்வாறே கூறினர்.

பையைத் திருடியவன் அப்போதும் பேசவில்லை. அவன் முகம் இருண்டுகிடந்தது. அவன் உள்ளம் 'திக்-திக்' என்று அடித்துக்கொண்டது. நண்பர் மூவரும் அவன் முகத்தைப் பார்த்தனர். அவருள் ஒருவன் அவனைப் பார்த்து "என்ன நண்பா, உன் முகமும் வாடியிருக்கிறதே! நீ ஒன்றும் பேச வில்லையே! நீ அப் பையைப் பார்த்தாயா?" என்று கேட்டான். பையைத் திருடியவன் "இல்லை, இல்லை," என்று கத்தினன்,

உடனே முதல் நண்பன், "நண்பரின் பை காணப்பட வில்லை என்று சொன்னவுடன் நாங்கள் மூவரும் பதைபதைத் தோம். நீயோ வாய்திறக்கவில்லை. நாங்கள் மூவரும் எங்களை ஆய்ந்துகொள்ளுங்கள் என்று நண்பரிடம் கூறினேம். நீ அப்போதும் வாய்திறக்கவில்லை. நீ 'திருதிரு' என்று விழிக்கிருய். நீ பையை எடுக்கவில்லை என்று சொன்னலும் நீதான் எடுத்தவன் என்பதை உன்முகம் கூறுகிறதே! **அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறதே,"** என்று கூறினன். கையும் களவுமாக அகப்பட் டுக் கொண்டவன் பையைக் கொடுத்துவிட்டுத் தன்னை மன்னிக் கும்படி வேண்டினன்.

இப்படி ஒரு நிகழ்ச்சி பழைய காலத்தில் நடந்திருக்கலாம். அப்பொழுது ஒருவன் கூறியதே, **"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"** என்ற பழமொழி. அம்மொழி காலப்போக்கில் மக்க ளிடையில் பரவிவிட்டது.

உலகப் புகழ்பெற்ற திருக்குறள் செய்த திருவள்ளுவரும்

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்,"

என்று இப்பழமொழியைத் தம் பாவில் அமைத்துள்ளார்.

மற்ருெரு புலவர், "முகம்போல முன்னுரைப்பதில்" என்று தம் பாவில் இப்பழமொழியைப் புகுத்திவிட்டார். இவ்வாறு ஒருவன் கூறிய மொழி மக்களிடத்தில் பரவிக் காலப் போக்கில் புலவர் செய்த நூல்களிலும் அழியாத இடம் பெற்றுப் பழமொழியாகிவிடுகிறது.

மேனுட்டுப் பழமொழிகள்:

ஒருவனின் கையில் ஒரு பறவை அகப்பட்டுக்கொண்டது. அப்பொழுது வேருெருவன் அவனைப் பார்த்து, "அப்புதரில் இரண்டு பறவைகள் இருக்கின்றன; இக்காட்டில் பத்துப் பறவைகள் இருக்கின்றன; வானத்தில் நூறு பறவைகள் பறக்கின்றன," என்ருன். முதலாமவன், "புதரில் இருக்கும் இரண்டு பறவைகளையும், காட்டில் உள்ள பத்துப் பறவைகளையும், வானத்தில் பறக்கும் நூறு பறவைகளையும் இனித்தான் பிடிக்க முயலவேண்டும். அவற்றுள் எத்தனை பிடிபடும் என்று உறுதியாகக் கூற இயலாது. இந்த நிலையில் என் கையில் ஒரு பறவை இருப்பது உறுதி. கையில் உள்ள ஒன்று புதரில் உள்ள இரண்டுக்கு ஒப்பாகும். (A bird in the hand is worth two in the bush) என்று கூறினுன். அவன் இறுதியில் கூறினது அறிவுக்குப் பொருத்தமானது. எனவே, அது நாளடைவில் மக்களிடையில் பரவி வேறூன்றிப் பழமொழியாகிவிட்டது.

இங்ஙனம் பேச்சுவாக்கில் பழமொழியான ஒன்றை ஒரு நூலாசிரியர் தம் நூலில் நேர்முகமாகவோ ஒரு கருத்தை வெளிப்படுத்தவோ எடுத்தாள்கிருர்.

இவ்வாறு இங்கிலாந்து நாட்டில் அந்நாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ற முறையிலும் சூழ்நிலைக்கு ஏற்றமுறையிலும் பல பழமொழிகள் காலப்போக்கில் தோன்றின. இவ்வாறே ஒவ்வொரு நாட்டிலும் பழமொழிகள் உண்டு. கல்வி மிகமிக, இப்பழமொழிகள் எழுத்துவடிவில் அழியாத இடத்தைப் பெற்றுவிடுகின்றன.

பழமொழிகள்

மேலே கூறப்பெற்ற சான்றுகளைக்கொண்டு ஆராயின், **மாந்தரது அழுந்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்துதோன்றுவதே பழமொழி** என்பது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். அதாவது, மக்கள் தங்கள் நடைமுறைகளினின்று கண்டறிந்து மொழிந்த மொழிகளே பழமொழிகள் என்பது. இப் பழமொழிகள் இருவகைப்படும். அவற்றுள் ஒருவகையின பொதுமக்களிடமிருந்துவருவன; அறிஞர் என்போர், மக்களால் போற்றப்பட்ட சமயத் தலைவர், துறவிகள் முதலியோர் கூறிய மக்கள் வாழ்க்கைக்குத்தேவையான அடிப்படை உண்மைகள் இரண்டாம் வகையின. அவற்றைப் பொதுமக்கள் தாமே முயன்று கண்டறிய அறிவுத்திறனோ நேரமோ போதாமையால் அல்லது வாய்க்காமையால், அப்படியே ஏற்றுக்கொண்டனர். எனவே, அவை வாழ்க்கை நெறிகளாக அமைந்துவிட்டன.

இவ்விருவகைப் பழமொழிகளும் பொதுமக்களிடமிருந்து அறிஞரிடத்திலும், அறிஞரிடத்திலிருந்து பொதுமக்களிடமும் முதலில் பேச்சுவழக்கில் பரவுகின்றன; பின்பு நூல் வழக்கில் இடம்பெற்றுவிடுகின்றன. பேச்சு வழக்கில் மட்டும் இருந்தால் எல்லாப் பழமொழிகளும் மக்கள் நினைவில் இருப்பது அருமை. அவை நூல்களில் இடம்பெற்றுவிடுவதால் என்றும் இறவாமல் காக்கப்படுகின்றன. பண்டை மக்களால் பேசப்பட்ட பழமொழிகள் நூல்களில் இடம் பெற்றுவிட்டமையால், நூல்வழக்கிலிருந்து பேச்சுவழக்கிற்கு வந்துகொண்டேயிருக்கின்றன. இங்ஙனம் பழமொழிகளை வாழ்விப்பதில் நூல்கள் மிகுந்த அளவு தொண்டு செய்கின்றன. (Oxford Dictionary of English Proverbs, Int. P. VIII.)

மக்களுள் உழவர், கைத்தொழிலாளர், கணியர், வேட்டுவர், மருத்துவர், உளநூல் ஆசிரியர் எனப் பலதிறத்தோர் இருக்கின்றனர். இவ்வாறே மலைகளில் வாழ்பவர் — வயல் வளப்பகுதிகளில் வாழ்பவர் என்பவரிடமிருந்து, அவரவர் நிலத்திற்கு ஏற்பவும், சூழ்நிலைக்கு ஏற்பவும் பழமொழிகள் அமையும். எனவே, இப் பலதுறை மக்களுடைய வாழ்க்கை முறைகளிலிருந்து வெளிப்படும் பழமொழிகளே பலதுறைப் பழமொழிகளாக இருப்பதைக்காணலாம். உளநூல், அரசியல், சமயம், கல்வி, மருத்துவம், நட்பு, பிள்ளை வளர்ப்பு, சமையற்கலை முதலிய பல்வேறுபட்ட கலைகள் பற்றிய பழமொழிகளும் நாட்டில் நடமாடுகின்றன.

விழைவீர்! விரைவீர்!

கத்தி ஒலிக்கும் கடலொடு பிறந்து
இத்தரை மீதில் இலங்கிடும் தாயே!
இன்றுள நிலைதனை எண்ணியான் அழுவேன்,
நின்றிது கேட்டுச் சென்றிடு செலவே.
மாந்தர் தோற்றம் மாண்புறு தமிழ்முதற்
போந்தது என்னும் பொன்றுப் புகழை
வான்மறை கண்டு வழங்கி இஞ் ஞாலம்
ஆண்டிடு வள்ளுவர் நெறிதனைச் சேரன்
இளவல் இளங்கோ இயம்பிய சுவைதனைச்
கழகம் இரீஇத் தமிழ்வளம் கண்ட
எண்ணறு புலவரின் எண்ணக் குவையை
மறந்தனர் தமிழர்; மாண்டது தமிழ்நெறி;
அறநெறி பிறழ்ந்து மறநெறி தழைக்கும்
அன்பில் உலகத் தாட்சியிற் றேய்ந்து
நின்றனர் தமரும்; நெஞ்சுரம் அறவே
அடையலர். அயலவர் ஆட்சியும் புகுந்தே
அடைந்தது தீங்கினை; உடைத்தது தமிழ்நலம்;
இன்னவா றுன இழிநிலை பலவில்
என்றும் தூய்மை எழிலொடு இலங்கும்
செந்தமிழ், கலப்பாற் சிறப்பினை யிழந்து
பொலிவும் வலிவும் பொருக்கென வீழ்ந்திட
என்புறு வாகி நின்றமை எண்ணிட
அய்யகோ! கலப்பால் அரும்பெருஞ் செல்வம்
உய்ய வழியிழந் தோடி மறைந்ததே.
அயலவர் தொடர்பால் ஆங்கிலம், வடமொழி.
உருதெலாம் சேர்ந்து உருக்குலைத் தனவே!
கற்பவை கசடறக் கற்று நம் நாட்டின்
நற்றலை யாக நாளை வருவோர்
கற்றதை மறந்து. கலப்பினை வளர்த்துக்
கழகச் சொல்லைக் கழறும் சிற்றூர்
மக்களைக் கெடுத்து, மதிப்பென எண்ணிக்
கலப்பில் ஊன்றித் தொலைப்பார் தமிழ்நலம்.
கல்லா தவரே நல்லவர் என்றும்
காட்டினர் செயலால்; நாட்டினர் இழிவை.
இந்நிலை மாறிடத் 'தென்மொழி' செழித்திட
எல்லாம் தூய்மை எழிலுரு வாகிடக்
கலைபயில் பல்துறைக் காளையர் தம்மை
வேண்டுவன், தமிழை வளர்க்க
விழைவீர்! விரைவீர்! விழுநலம் பெறவே!

— மு. சாத்தையா —

எண்ணும் எழுத்தும்.

கா. சந்தானராசகோபாலன்.
(புலவர் இறுதிநிலை. அரசர்க்கல்லூரி, திருவையாறு)

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' எண்ணெழுத்திகழேல்,' என்றிசைக்கின்ருள் தண்டமிழ் தந்த ஔவை. 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்-கண்ணென்ப வாழுமுயிர்க்கு', எனப்பாடுகின்ருர் தெள்ளு தமிழ் உய்யவந்த வள்ளுவஞர். இவையெல்லாம் எதைக் கூறுகின்றன? எண்ணென்ருல் என்ன? எழுத்தென்ருல் என்ன? அவை வலியுறுத்தப்படுவது ஏன்? கண்ணுக்குக் கூறப்படுவதின் கருத்து யாது? என்பன ஈண்டு ஆராயற்பாலன.

'உயர்திணை யென்மஞர் மக்கட்சுட்டே' என்கின்ருர் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர். 'ஒருகாலும் நீங்கா உயர் கல்வி இன்றேல்—இருகால் விலங்கே இவண்', என 'அரும் பொருள் அமுதம்' அறைகின்றது. 'Man is a two legged animal'. (கல்வியில்லா மாந்தன் காலிரண்டுள்ள விலங்கு) என்று பிளாட்டோ கூறுகின்ருன். நல்லன இவை; அல்லன இவை, நல்லனவற்றைச் செய்தல்வேண்டும்; அல்லனவற்றைத் தள்ளல் வேண்டும் எனப் பகுத்தறிந்து செய்யும் இயல்பினர் மக்கள், இதனுல் தான் அவர் விலங்கினும் உயர்ந்தவராகக் கருதப்படுகின்றனர்; உயர்திணையாக எண்ணப்படுகின்றனர். இக்கருத்தினை உள்ளடக்கி மொழிந்தார் தொல்காப்பியர். இந்தப் பகுத்தறிவு கல்விகேள்விகளால் பெறக்கூடியதொன்று. கல்வி இன்றேல் பகுத்தறிவு இல்லை; பகுத்தறிவு இன்றேல் மாந்தனில்லை; உயர்திணை இல்லை; விலங்கே அவன்; அஃறிணையாகவே கருதப்படுவான். இதனைத்தான் அரும்பொருளமுதத்தின் அடியும், பிளேட்டோவின் பொன்மொழியும் வலியுறுத்துகின்றன. இவற்றையெல்லாம் ஒழுங்குபட எண்ணிய வள்ளுவரும்,

'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்ருரோ டேனை யவர்'

என அழகுபட ஈரடியில் மொழிந்துசென்ருர். இச் சிறந்த கருத்துக்களைத்தாம் நாம் முன்னுரையில் கூறிய இலக்கிய அடிகள் தம்முள் பொதிந்துகொண்டு திகழ்கின்றன.

எண்ணென்பது கணிதம்; எழுத்தென்பது இலக்கிய இலக்கணங்கள். இவை கண்ணுவது எப்படி? கண் ஒருவனுக்குத் தலைசிறந்த உறுப்பு. **'கண்ணிற்சிறந்த உறுப்பில்லை'** என்பது தஞ்சைவாணன் கோவைஅடி. கண்கள் புறப்பொருள்களைக் காணப் பயன்படுகின்றன. எண் அவ்வாறு பயன்படுதலை;

"ஆதி முதலொழிய வல்லா தன வெண்ணி
நீதி வழுவா நிலைமை யவான்-மாதே
யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு"

என்னும் இவ் வெண்பாவாலும், எழுத்து, அவ்வாறு நன்மை பயத்தலை,

"எழுத்தறியத்தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித் திறத்தின் முட்டறுப்பா னாகு-மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்னும் இவ் வெண்பாவானும், தெள்ளிதின் உணரலாம். இது நிற்க, இன்று கணிதநூல் நந்தம் தமிழ்மொழியில் இல்லாவிடினும் பண்டுபல ஒளிபெற்றுத் திகழ்ந்திருக்கின்றன. குறளுக்கு உரைகண்ட **'பரிமேலழகர்'** கூட, **'எண்ணென்பது கணிதம். அது கருவியும் செய்கையும்** என இருவகைப்படும், அவை **ஏரம்ப** முதலிய நூல்களிற் காண்க' என உரையெழுதுமாற்றால் அது விளங்கும். இக் கணித நூல்கள் கடல்கோளால் அழிவு பட்டிருக்கின்றன, என்பது ஒரு பாட்டால் அறியக்கிடக்கிறது.

"ஏரணம் உருவகம் யோகம் இசை கணக்கிர தஞ் சாலந்
தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோசம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப் பெயருமாள"

என்பதே அப்பாட்டு. இப்பாட்டில் காணப்படும் **'ஏரணம்** என்னும் நூலும்' கணக்கு நூலே. **'ஏரணங் காணென்பரெண்ணர்'** என்னும் இவ்வடியே அதற்குச் சான்று.

பண்டு நம் தண்டமிழில் முழு இலக்கியங்களாகக் கிடைத்தன இரண்டே இரண்டுதாம். அவைதாம் திருக்குறளும், நாலடியாரும். குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு,

புறநானூறு போன்றவை தனித்தனிப் பாடல்களால் தொகுக்கப்பட்ட தொகைநூல்கள். இளங்கோ தந்த சிலப்பதிகாரம், கம்பன் தந்த இராமாயணம், மணிமேகலை, இன்னபல பின்னர் தோன்றிய முழு இலக்கியங்கள். இலக்கணநூல்கள் கடல்கோளால் அழிந்துபோக நமக்குக் கிடைத்தது தொல்காப்பியம் ஒன்றே. இந்நூலைப் பின்பற்றித்தான் நன்னூல், அகப்பொருள் போன்ற நூல்கள் நந்தம் செந்தமிழில் எழுந்தன. அதுகிடக்க.

எண்ணறிந்திருந்தால் எண்ணலளவை, எடுத்தளலளவை, நீட்டலளவை, முகத்தலளவை முதலிய அளவுகளின் அன்றைய இன்றைய நிலைகளை அறியலாம். கால அளவையும் அறியலாம். விண்ணைப்பற்றிய அளவுகளையும் உணர்ந்து தெளியலாம். ஆனால் இன்று கணக்குப்பற்றிய நூல்கள் நமக்குக் கிடைக்காமையினால் இவற்றையெல்லாம் பட்டயங்களைக் கொண்டும், கல்வெட்டுக்களைக் கொண்டும், இலக்கியங்களைக் கொண்டும் அறியவேண்டியிருக்கிறது.

எண்ணலளவை: பண்டு, ஆம்பல், வெள்ளம் என்னும் சொற்கள் கோடிக்கு மேற்பட்ட எண்களைக்குறித்தன. ஆயிரம் இன்றுபோல் அன்றும் வழக்கில் இருந்தமை, 'சிறைகொள் வேலி யாயிரம் விளையுட்டாக' என்றும் பொருநராற்றுப் படையடியால் கண்டு தெளியலாம். பண்டு வழங்கிய மாகாணி. வீசம், முந்திரி முதலிய பின்ன அளவுகள் இன்றும் சிற்றூர்களில் வழங்கப்படுவதைக் காணலாம்.

எடுத்தலளவை (நிறுத்தலளவை): பல்லவர் காலத்து, கழஞ்சு. மஞ்சாடி முதலிய அளவுகள் பொன்நிறுக்கப் பயன்பட்டிருக்கின்றன. பாண்டியர் அரசியலில் கழஞ்சு, காணம் முதலிய அளவுகள் காணப்படுகின்றன. இவற்றோடு மட்டுமல்ல. பாண்டியர் காலத்தே காய்கறிகள், புளி முதலிய பொருள்களை நிறுக்க துலாம், பலம் முதலிய அளவுகள் இருந்துள்ளன.

12 மஞ்சாடி = 1 கழஞ்சு (பல்லவர்)
10 காணம் = 1 கழஞ்சு (பாண்டியர்)
100 பலம் = 1 துலாம் (பாண்டியர்)

இவற்றுள் இன்று பலத்தைத்தவிர மற்றைய அளவுகள் வழக்கில் இல்லை. அன்று. இன்றிருக்கும் சேர், வீசை, மணங்கு இவை வழக்கில் இல்லை.

நீட்டலளவை: கழக நூற்களுள், பத்துப்பாட்டுள் 'முடத்தாமக்கண்ணியார்' தந்த பொருநராற்றுப்படையொன்று. இந்நூலில் அப்புலவர் பெருமாட்டி கரிகாலன் நாட்டினைப் புகழும் இடத்து, அக்கால நில அளவையும் சுட்டிச் சொல்கின்றார். வரம்பு கட்டப்பட்ட ஒருவேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது என்று கூறுகின்றார்.

"கடுந்தெற்று முடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலிநெல்லின் சிறைகொள் **வேலி**
யாயிரம் விளையுட் டாக
காவிரி புரக்கு நாடு கிழவோனே"

இதிலிருந்து கழக நாளிலேயே சோழநாட்டில் இன்று வழக்கில் இருக்கும் வேலி என்ற நிலஅளவு இருந்துள்ளது என்பதனை அறிகின்றோம். இதுபோலவே, மா, குழி என்ற அளவுகளும் வழக்கில் இருந்துள்ளன. பல்லவர் காலத்தே கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, பாடகம் முதலிய அளவுகள் இருந்துள்ளன. பாடகம் என்பது 240 குழி அளவுள்ள நிலத்தைக் குறிக்கும். நிவர்த்தனம் என்பது 200 நாற்கோண முழம்கொண்ட நிலம் ஆகும். மற்றும், நாலுசாண்கோல், பன்னிருசாண்கோல், பதினறுசாண்கோல் இன்னபல நீட்டலளவுகளும் இருந்துள்ளன.

முகத்தலளவை: பாண்டியர் காலத்தே நெல், கடுகு, மிளகு இன்னபல பொருள்கள் செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி முதலிய முகத்தல் கருவிகளால் அளக்கப்பட்டன.

5 செவிடு = 1 ஆழாக்கு
2 ஆழாக்கு = 1 உழக்கு
2 உழக்கு = 1 உரி
2 உரி = 1 நாழி
6 நாழி = 1 குறுணி
15 குறுணி = 1 கலம்

இவற்றுள் இன்று குறுணி, கலம் முதலியன வழக்கில் இருக்கின்றன. பல்லவர் காலத்தும் நாழி, உரி, உழக்கு என்ற அளவுகள் இருந்துள்ளன. இவற்றுள் தொல்காப்பியர் காலத்திலேயே நாழி, உரி, அளவுகள் இருந்துள்ளன. இதனை,

"உரிவருகாலை நாழிக்கிளவி
இறுதி இகர மெய்யொடுங் கெடுமே
டகரா மொற்றும் ஆவயினான"

இத்தொல்காப்பியச் சூத்திரத்தால் நாமறியலாம்;

(241. எழுத். தொல்)

எண்ணெய், நெய், பால் இன்னவை அளக்க 'பிடி' என்ற அளவு இருந்துள்ளது. சோடு, மரக்கால், பதக்கு, குறுணி, கலம் முவலிய அளவைகளும் இருந்துள்ளன. இவற்றுள் மரக்கால், பதக்கு, குறுணி, கலம் என்பன இன்றும் வழக்கில் இருக்கின்றன.

கால அளவு: தமிழர்கள், பண்டு பொழுதை, பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகையாகப் பிரித்தனர். அவற்றுள் சிறுபொழுதை

"மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்"

(நம்பிஅகப்பொருள். சூத். 12.)

என ஐவகையாகப் பிரித்தனர். அவற்றுள் மாலைக்காலம், ஞாயிறின் முன்னும், எற்பாட்டின் பின்னும் உண்டாகிய காலம் என்றும், யாமம், இடைநேரமென்றும்; நண்பகல் உச்சிப்பொழுது என்றும் உணர்ந்து தெளிந்தனர். இக்காலங்களைப் பூக்கள் மலர்தலும், கூம்புதலும், கொண்டும்; கோழி கூவுதலைக் கேட்டும், வெய்யோனைக்கண்டும்; நிலவினைக் கண்டும் குறித்தனர். நாகரிகம் முதிரமுதிர ஒருநாளைக்கு 60 நாழிகைகள் என்று வகுத்தனர். நாழியினை, நிழலை அறிந்தும், வட்டில் கொண்டும், துரும்புகொண்டும், அளந்தறிந்தனர். ஆனால் தமிழரிடையே நாழிகண்ட இம்முறை 'மணிப்பொறி' வந்ததால் இன்று அழிவுற்றது. முற்றும் அழிவுற்றது என்று கூறுதற்கில்லை. சிற்றூர்களில் இந்நாழிவழக்கு ஒருசிலரிடம் இருந்து வருகின்றது. பண்டு 'காதம்' என்பது 10 கல் தொலைவினைக் குறித்தது.

விண்ணைப்பற்றிய அளவு, பண்டைத் தமிழர் விண்ணைப்பற்றியும் அறிந்திருந்தனர். 'செஞ்ஞாயிற்றினது போக்கும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற் சூழப்படும் பார்வட்டமும், காற்றியங்கும் திக்கும், ஓர் அடிப் படையுமின்றித் தானே நிற்கின்ற வான்வெளியும் என்று சொல் லப்பட்ட இவற்றை அங்கங்குப் போய் அளந்தறிந்தவரைப் போல நாளும் இத்துணையளவை உடையனவென்று சொல்லும் கல்வியுடையோரும்' பண்டு இருந்தனர். இக்கருத்தினைக் கீழ்க் கண்ட புறப்பாட்டில் கண்டு தெளியலாம்.

"செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலையிய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போலவென்றும்
இனைத்தென் போரு முளரே..." (புறம்–30)

விண்ணூல் அறிஞர்க்கு அறிவர் என்று பெயர். பண்டு இவ் வறிவரும் (கணியர்) இருந்துள்ளனர்' என்பது 'மூவகைக் கால மும் ஆற்றிய அறிவன் தேயமும்' என்னும் தொல்காப்பிய அடியால் விளங்குகிறது. இதற்கு உரைகண்ட இளம்பூரணர் கூட 'மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது, பகலும் இரவும், இடைவிடாமல் வானைப்பார்த்து, ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளுந் தூமமும் மீன்வீழ்வும் கோள் நிலையும், மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல்' என்று உரை கூறினார். இதனால் விண்ணூல் அறிஞர் பண்டு இருந் தனர்; அவர் அறிவர் (கணியர்) என அழைக்கப்பட்டனர் என்பதனை அறிகின்றோம். அவ்வறிஞர் விண்ணைப்பற்றிய கணித நூலும், அறிவியல் நூலும் இயற்றியிருப்பர் என்பது திண்ணம். அவை நமக்குக்கிட்டாதது நமது போகூழ் தானன்றிப் பிறிதல்ல. இதுவரை எண்ணைப்பற்றிக் கூறினோம். இனி இலக்கியத்தைப் பற்றிக் கூறப்புகுவோம்.

வாய்மை என்பது தீமையில்லாத சொல்லாகும். இத் தகைய வாய்மை நெறியில் பண்டைத்தமிழர் வாழ்ந்தனர். இன்று வாழ்கின்றனரா என்றால் இல்லை; தாழ்வடைந்து வருகின்றனர் தமிழர். அறமன்றங்களில் பொய்மை தான் வாய்மையாகக் கருதப்படுகிறது. அது நிற்க, இவ்வாய்மையைப்பற்றி வள்ளு வர் 'தான் உண்மையாகக் கண்டவற்றுள் வாய்மையைப்போல் நன்மை அளிப்பது பிறிதில்லை' என அழகாகக் கூறுகின்றார்.

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

இத்தகைய சிறந்த கருத்துக்களை – ஒழுக்க நெறிமுறைகளை – திரட்டிக் குறள் நூலையாத்துத் தந்த வள்ளுவர் இன்றில்லை. ஆனால் கற்றார் அவரோடு உறவாட முடிகின்றது. அவரும் கற்றாரோடு உரையாடுகின்றார். மேற்கண்ட குறட்பாவே இதற்குச் சான்று.

'பழகப் பழகப் பண்புடையாளர் தொடர்பு படிக்கப் படிக்க நூல் இனிமை பயப்பது போல இனிமை தரும்', என நட்பு அதிகாரத்தில் ஒரு குறளில் கூறிச்சென்றுள்ளார்.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
பண்புடை யாளர் தொடர்பு" (நட்பு–3)

என்பது அக்குறள். இக்குறளை நாம் நன்கு ஆராய்ந்ததால் நமக்கு இருகருத்துக்கள் புலனாகி, நாமே நம்மையும், தந்த வள்ளுவரையும், பெற்ற தமிழையும் வாழ்த்தி வியந்துநிற்போம் இறுதியில் வருந்தியும் நிற்போம். ஒன்று, வள்ளுவர் சிறந்த நண்பரோடு பழகி இருக்கிறார் என்பது. மற்றொன்று வள்ளுவர் சிறந்த பல நூல்களைப் பலமுறை சுவைத்துப் பயின்று நயம்கண்டு இன்புற்றிருக்கிறார் என்பது. வள்ளுவர் தந்த திருக்குறளை வையகமே ஏற்றிப்போற்றி இன்புறுகின்றது. ஒத்த நூலும் மிக்க நூலுமின்றிக் குறளே தனித்த நூலாக வையத்து வாழ்கின்றது. இத்தகைய குறளைத்தந்த வள்ளுவரே நயம்கண்டு நூல்களைப் பயின்றாரென்றால், அந்நூல்களெல்லாம் குறளைவிடச் சிறந்தவையாக இருந்திருக்கவேண்டும். அவை உண்மையாகத் தமிழில் இருந்திருக்கத்தான் வேண்டும். அப்படியென்றால் அவை எங்கே? பெயர்கள்கூட அறிய ஒல்லாது அழிவுபட்டனவே! இதனைக்கண்டுதான் வருந்தவேண்டியிருக்கிறது. காலம் இடையிட்ட இவற்றையெல்லாம் கற்றாரன்றி வேறு யாரறிய ஒல்லும்!

இன்றைய நூல்களையோ அல்லது அன்றைய நூல்களையோ தமிழ்–ஆங்கிலம், தமிழ்–கிரேக்கம், தமிழ்–சீனம் பயின்றால் முறையே அன்றும் இன்றும் தமிழ்நாடும் அமெரிக்காவும், தமிழ்நாடும் கிரேக்கமும், தமிழ்நாடும் சீனவும் எவ்வெவ்வாறு முன்னேறி வாழ்ந்துள்ளன–வாழ்கின்றன, என்பதை அறியலாம். கல்லாதார் தேயம் இடையிட்ட இவையிற்றை எவ்வாறு அறிய ஒல்லும்!

இவற்றையெல்லாம் ஒழுங்குபட எண்ணிய வள்ளுவரும் **கற்றோர்தான் கண்ணுடையர்** என்றெண்ணப்படுவர்;

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்பார்க்க)

பந்து விளையாட்டு

இக்காலத்து உலகெங்கணும் பந்து விளையாட்டு இளைஞ ரின் தலைவிளையாட்டாகக் கொள்ளப்பட்டு ஆடப்படுகின்றது. இவ்விளையாட்டைப் பண்டைத் தமிழகத்தில் பெண்கள் ஆடிய தாகவே இலக்கியங்களிற் பார்க்கின்றோம். ஆடவர், அரசியல் பொதுநலம், நாடுகாத்தல் முதலிய தொழில்களை மேற்கொண்டு போர்க் காலந் தவிர ஓய்வுக் காலங்களில் நீராட்டு, தேரோட் டம், புரவியேற்றம், வாட்பயிற்சி முதலிய விளையாட்டுக்களையே அயின்றனர். மகளிர் இல்லறவேலைகள் செய்வதற்குரிய நேரம் போக ஒழிந்த வேளைகளில் சோலைகளிலும், நிலாமுற்றங்களி லும், விளையாட்டிடங்களிலும் பந்தாடிக் களித்தனர். இதனால் அவர்தம் உடல்கள் நோயின்றியும் அழகுமிகுந்தும் பொலிவதா யின. பழம் புலவர் பெண்டிரைப் பந்தார் விறலியென்றும், பந்தணை விறலியென்றும் குறிக்கின்றனர். பெருங்கதையில் "பந்தடிகண்டது" என்ற பகுதி முழுவதும் பெண்கள் பந்து விளையாடி மகிழ்ந்ததை விரித்துக்காட்டுகின்றது. அதில் இராசனை என்பாள் காலாலும், கையாலும் பந்தை அடித்தாள் என்றும், காஞ்சனைமாலை யென்பவள் ஒரு பந்தை வானில் விட் டெறிந்தும், அது வருவதற்குள் வேறொரு பந்தை வானில் விட்டெறிவதும் மாறிமாறிப் பிடிப்பதுமாக ஆயிரத்தைந்நூறு முறை வீசிப்பிடித்து விளையாடினாள் என்றும், அயிராபதி என் பாள் மலர்முடித்தபடியும், பொட்டிட்டுக்கொண்டும் இரண் டாயிரங் கை அடித்தாளென்றும் இவ்வாறே பலரும் அடித்த னர் என்றும் குறிக்கப் பெறுகின்றன. பெண்டிர் பொழில் களிற் கூடிப் பந்தாடும் இடங்களைப் 'பந்தினை யிளையவர் பயி லிடம்' (நாட்டுப்படலம் 48) என்றும், அங்கு அவர் ஆடுதலை

'பந்துகண் மடந்தையர் பயிற்று வாரிடை
சிந்துவ முத்தினம்' (நகரப்படலம் 45)

என்றும் கம்பர் கூறுகின்றார்.

பந்தாடிக்கொண்டே மகளிர் பாடும் பாட்டுக்களைக் கந்துகவரி எனும் பெயராற் குறித்தனர் பழம்புலவர். சிலப்பதி காரத்திலும் அத்தகைய பாடல் வருகின்றது. பந்தாடுதலை யன்றிச், சாழல், தெள்ளேணம், தோணோக்கம், கோலாட்டம், கும்மி உந்தி முதலிய விளையாட்டுக்களும் மகளிர்க்கே உரியன வாக அறியப்படுகின்றன.

இத்தகைய விளையாட்டுக்களால் பெண்டிர் இசைப் பயிற்சியையும் உடற்பயிற்சியையும் பெற்றுவந்தனர். இக்காலத் துப் பெண்டிர் உலாவுதலையும் காண்கிலமே! வீட்டில் அடை பட்டுக் கிடப்போர் வெளிப்போய் உலவலிலாது, படக் கொட்டகை, நாடகக் கொட்டகை முதலிய இருட்டறைகளில் நான்கைந்து மணிப்பொழுது அடைபட்டு உடலையும் உளத்தை யும் கெடுத்துக் கொள்கின்றனர். என்னே இவர்தம் அறியாமை!

வெளிநாடுகளில்

தென்மொழி விற்பனையாளர்.

சிங்கப்பூர், மலாயா, கொழும்புப் பகுதிகளில் உள்ள தமிழன்பர் பலரும் தென்மொழிபற்றிய விளக்கங்கள் கேட்டு எமக்கு முடங்கல்க்ள் வரைகின்றனர்.

கீழ்க்காணும் விற்பனையாளர் தம்மிடம் தென்மொழியைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள அவரை வேண்டுகின்றோம்.

சிங்கப்பூர், மலாயா கூட்டரசுப் பகுதிகட்கு:

Dravida Nadu News Agencies,

Post Box No. 2025, SINGAPORE.

கொழும்புக்கு:

Pakutharivu Pannai,

Post Box No. 962, COLOMBO.

விடுதலை.

(Shelley)

[TO LIBERTY]

எரிமலைகள் கனற்குழம்பைக் கக்கிநின்றால்
எரிபடரும்; பேரொளியால் புவி நடுங்கும்.
மறிகடல்தான் வெறிகொண்டு கொந்தளித்தால்
வான்வெளியும் தரைமுகடும் அதிர்ந்து நிற்கும்.
கொடும்**புயல்** தன் போர்முழக்கம் ஆர்த்து நின்றால்
குளிர் கடலின் பனிமலைகள் சரிந்து வீழும்;
நடுநடுங்கும் பாறையெலாம், நிலைகுலைந்து
நழுவியவா றுறுகளில் உருண்டு வீழும்.
விழிபறிக்கும் கடு**மின்னல்** முகில் கிழித்தால்
விரியுலகின் வெளியனைத்தும் ஒளியில் மூழ்கும்;
அழிவெறியும் **நிலநடுக்கம்** ஒருபால் நேர்ந்தால்
அனைத்துலகும் குலைந்தசையும், கடலும் போழும்.
எனினுமென்ன? **விடுதலை**யே, நீ கிளர்ந்தால்
இவையனைத்தும் நின் வலிமுன் நிற்றலுண்டோ?
நினது விழி மின்னலினுங் கூர்ந்த தாகும்
நிலநடுக்கம் நின்நடைக்குத் தோற்றுப் போகும்.
கடல்முழக்கம் நின்முழக்கில் அடங்கிப் போகும்;
கனலுமிழும் எரிமலைகள் நின்பால் தோற்கும்.
விடுதலையே! நின்றன் ஒளிப் பிழம்பின் முன்னர்
வெங்கதிரும் ஒளிமங்கிப் போகு மன்றே!
வெங்கடலை, எரிமலையைப், புவியை, விண்ணை,
விடுதலையே, ஊடுருவிப் பாய்கின் றாய்நீ!
பொங்கியெழுந் துளந்தோறும் புகுகின்றாய்நீ.
புதுமையென நாடுதொறும் நுழைகின்றாயே.
நகர்தோறும் ஊர்தோறும் இல்லந் தோறும்
நலிவகற்றும் காலைஒளிக் கதிர்நீ ஆனாய்;
அகஞ்செருக்கும் கொடுங்கோன்மை அழிக்கின்றாய்நீ
அடிமைநிலை தவிர்ப்பதுவும் நீதா னன்றே!

தமிழில்: **மா. இலெ. தங்கப்பா. பி. ஏ., பி, டி.**

கம்பர் இயற்கை அறிவு

(::)

இராமாயணம் பாடிய கம்பன் சீதையின் மேனி நிறத்தை அவள் கணவன் இராமன் வாயிலாகப் புலப்படுத்துகின்றுழி.

என்னிறம் உரைக்கேன்! மாவின்
இளநிறம் முதிரும்! மற்றைப்
பொன்னிறங் கறுக்கும் என்றால்
மணிநிறம் உவமை போதா
மின்னிறம் நாணி எங்கும்
வெளிப்படா ஒளிக்கும்! வேண்டின்,
தன்னிறந் தானே ஒக்கும்,
மலர்நிறஞ் சமழ்க்கு மன்றே!

என்று கூறிய செய்யுள் (கிட்கிந்தா காண்டம், நாட விட்ட படலம் சாரு) சீதையின் மேனி நிறம் இன்னதென்று குறித்துக் கூறுதாய்ப் பெரியதொரு குழப்பஞ் செய்தல் காண்க, ...வடநாட்டுப் பெண்மக்கட்குரிய பொதுநிறமாகிய வெண்மையை மட்டுங் கூறினும், ஒருவாறு அவளது வடிவத்தை நம் அகக்கண் எதிரே காண்டல் கூடும். அவ்வளவு தானுங் கூறகில்லாது, தென்னாட்டு மாதரின் மாந்துளிர் நிறத்தை முதலிலும், பொன்னிறத்தை அதன் பின்னும், மணியின் நிறத்தை (ஒன்பது மணிகளும் வெவ்வேறு நிறத்தன வாதலால் அவற்றுள் இன்ன மணியின் நிறம் என்று குறியாமையும் ஒரு பெருங் குறைபாடு) அதன் பின்னும், மின்னலின் நிறத்தை அதன் பின்னுமாக வைத்துக் குழப்பிச் சீதையின் மேனி நிறம் இன்னதெனக் காட்டும் இயற்கை நுண்ணுணர்வின்றிப் போயது நல்லிசைப் புலமையாமோ? கூறுமின்! இங்ஙனமே, உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரையிற் சீதையின் உருவழகை இராமன் தன் தூதுவனாகிய அனுமானுக்கு விரித்துக் கூறுவதாக வைத்துக் கம்பன் வாளா பாடியிருக்குஞ் செய்யுட்கள் முப்பத்து நான்கினும் இயற்கைக்கு மாறாகக் காணப்படும் பிழைபாடுகள் மிகப்பல.

— மறைமலையடிகள். (சாகுந்தல நாடக ஆராய்ச்சி)

(18-ஆம் பக்கத்தொடர்ச்சி)

மற்றையோர் கண்ணிருந்தும் குருடரே; அவர்தம் கண் ஊனக் கண்; கண்ணாக அது கருதப்படமாட்டாது; புண்ணாகவே கருதப் படும்' எனும் பொருள்பட

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (குறள்; கல்வி- ௩)

என அழகுபட மொழிந்துசென்றார்.

இதற்கு உரைகண்ட பரிமேலழகரும் 'தேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக் கண்ணுடைமையிற் கற்றோரை 'கண்ணுடையர்' என்றும், அஃதின்றி நோய் முதலியவற்றால் துன்பஞ்செய்யும் ஊனக் கண்ணேயுடைமையாற் கல்லாதவரைப் 'புண்ணுடையர்' என்றும் கூறினார்' என்று உரை கூறினார்.

எள்ளினின்றும் எண்ணெய் எடுப்பதுபோல இலக்கியத்தினின்றும் தோன்றுவது இலக்கணம். இலக்கியம் இல்லையேல் இலக்கணம் இல்லை என்று கூறலாம்.

'எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
விலக்கியத்தினின் றெடுபடு மிலக்கணம்'

என்பது சூத்திரம்.

'கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாது தம்மைத் தாம் எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டுமோ, அதுபோல ஆடவரும் நிறையின் வழுவாது தம்மைத்தாம் காத்துக்கொள்ளல் வேண்டும்; அதுதான் பெருமை எனப்படுவது.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத் தான் கொண்டொழுகின் உண்டு"

(குறள்; பெருமை ச)

இவ்விலக்கியத்தினின்றும் ஆண்களுக்குப் பெருமை என்னும் இலக்கணம் இன்றியமையாதது என்பது அறியப்படுகின்றது. இதனைக் கண்டுதான் நம்பி அகப்பொருளும் **"பொருவிறந்தோற்குப் பெருமையும் உரனும் வேண்டும்"** என இலக்கணம் வகுத்தது. இவற்றையெல்லாம் கற்றார் தாமே அறிய வல்லும்.

திருமூலர் 'கல்லாத மூடரைக் காணவும் ஆகாது — கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று' என்று கல்லாதவரை அவர் கூறும் கூற்றுக்கு இலக்காகக் கூடாது என்றெண்ணிதான், 'எண்ணும் எழுத்தும் கண்; அதை இகழேல்' என்றெல்லாம் முன்னையோர் மொழிந்துசென்றனர். அவர் 'தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த நோக்கம் கொண்டவர். நாமும் அவர் கூற்றுப்படி எண்ணுமெழுத்தும் கற்றுத் திகழ்ந்தோமானால் அவரைப்போல் இன்புற்று வாழலாம். அவரோடு உறவாடி—உரையாடி மகிழலாம். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாகத் திகழலாம்.

❋ ❋ ❋

அரசிருப்போம்!

—[கோவைவாணன்]—

(வெண்பா)

தென்றற் பொதியத் திருச்சாரற் றணிகழகக்
குன்றத் திருந்தாய் நீ கோவேந்தே!—என்றுமென
துள்ளத் திருந்துசெங் கோல்செலுத்தும் செல்வீ, நீ
வெள்ளி நிலவாய் விளங்கு!

பாரில் படர்ந்துலவும் பாங்கு மொழிகளெலாம்
ஓரினின் செல்வக் குழவிகளே!—காரில்
வான்போல் கவினுடைய வாண்முகச் செஞ்செல்வீ
தேன்போல் தெளிவாய்த் திகழ்!!

பண்ணைப் பிழிந்துநற் பாகுடன் சேர்த்தூட்டி
மண்ணை வளர்த்திட்ட மாமணியே!—விண்ணை
இடித்தெங்கும் உன்றன் இழிபோக்கச் செல்வோம்
புடைத்தெழுவெந் தோளிற் பொலி!!

மன்னரவர் கைகளிலும் மாப்புலவர் நாவினிலும்
கன்னல் மொழியே களித்திருந்தாய்!—இன்றுகில்
உன்றன் சிறப்புயர்வை உன்னியுணர்ந் துய்ந்தோமே
நன்றிகெட்ட பேதையெமை நாடு!!

பண்டைத் தமிழரசர் பண்போடு வாழ்ந்ததெலாம்
வண்டமிழே யுன்றன் வளத்தாலே!—விண்டுரைக்க
நாகூசும்; மெய்நடுங்கும்; நற்றமிழச் செல்வீ! நின்
வேகின்ற சேயெமக்கே வாழ்!!

நின்னை யொழிந்தோர் நிலவுலகில் தெய்வமில்லை!
கன்னற் றமிழேநற் காப்பறமே!—மன்னும்
புகழுக் கரசி! புலவர்நாச் செல்வீ! நின்
புகழுக் கரணுவோம் புடைத்து!

—○—

செல்வம்

உன்னை நான் மதிப்பதில்லை; அதனால் நீயும் என்னை மதிப்பதில்லை.

உன்னைப் போற்றிக் கொண்டாடுவோரிடமே நீ புகலிடந் தேடுகின்றாய்.

நீ அவர்க்குப் புகழ் சேர்க்கின்றாய். அவர்தம்மை வாழ்விக்கின்றாய். அவரை வளர்க்கின்றாய். அவரால் நீ வளர்கின்றாய்.

நல்ல உள்ளமென்றும், உயர்ந்த எண்ணம் உள்ளவரென்றும், நீ கவலைப்படுவதில்லை.

நீ மிகுவாகத் துணைதேடுகின்றாய்; உனக்குத் துணைசேர்ப்பர் தமக்குத் துணையாகின்றாய் நீ! உன்னைத் தன்னந்தனியாக விட்டு வைப்பாரை, நீ தனியாக விட்டுவிட்டுப் புறம்போகின்றாய்!

என்னிடம் நீ என்றும் நெருங்கியதில்லை.

தப்பித்தவறி நெருங்கி என்னையறிந்தவுடன் நீ அஞ்சி ஓடுகின்றாய் !

செல்வமே !

நீ இல்லாமல் பலர் தூங்குவதில்லை.

நீ இருப்பதாலும் பலர் தூங்குவதில்லை.

மண்ணாய், மரமாய், இரும்பாய், உயிராய், பயிராய், பொருளாய், நீ காட்சியளிக்கின்றாய்.

நீ தூங்குவோனைத் தட்டி எழுப்புகின்றாய் !

நீ தூங்காதவனைத் தூங்கவிடுவதில்லை.

பொய்மையும், சூதும், களவும், உன் நண்பரோ? அவை குடியேறி நிற்கும் நெஞ்சம் உடையவர் தம் கைகளில் நீ விளையாடிக் களிக்கின்றாய். விலைமகளுக்கு நீ காதலாகவும், ஒழுக்கமிலானுக்கு நீ சாதலாகவும் அமைகின்றாய்.

செல்வமே !

நீ ஆரவாரத்தின் தாய் !
நீ களிப்பின் வித்து !
நீ ஏழைக்குத் தலைவன்.
செல்வர்க்கு ஏவற்காரன்.

உன்னை நான் போற்றாததற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

ஒன்று நீ குருடன்.

எங்கு போய்ச் சேரவேண்டும் என்று விளங்காதவன் நீ !

அப்படிப்பட்டவரை நான் விரும்புவதில்லை.

இரண்டு, நல்ல உள்ளத்தை நீ கெடுக்கின்றாய் !

உனக்கு இடந்தந்தால் பொய்மைக்கும், ஒழுங்கின்மைக்கும், பேராசைக்கும், நீ புகலிடம் கேட்கின்றாய்.

இப்படிப்பட்டவரையும் நான் விரும்புவதில்லை.

மூன்று, நீ ஒரு கோழை !

எங்குப் போனாலும் இரும்புக் கதவிற்குப் பின்புறம் பதுங்கியிருக்கின்றாய்.

வெளியுலகில் அச்சமின்றி உலவும் என்னைப்போன்றவர்க்கு நீ என்றும் துணையாக முடியாது.

செல்வமே !

நீ வானில் தவழும் நிலவாயினும், நான் பள்ளத்தாக்கின் ஆழத்தின் பருக்கைக் கல்லாயினும், உன் ஒளி என்னைத்தேடியே வந்தாகவேண்டும்;

நான் உன்னைத் தேடி வருவது என்றுமில்லை.

நீ எனக்கு வேண்டாதவனல்ல !

நானே உனக்கு முற்றிலும் வேண்டாதவனே !

—[மெய்மைப்பித்தன்]—

எழுதுகோல்

எழுதுகோல் என்பதற்கு ஒரேசொல் தமிழில் இல்லை என்பர். இது மனக் குறையே அன்றி வேறு இல்லை.

பண்டையில் மக்கள், பறவைகள் இறகுகளாலேயே எழுதிவந்தனர். பறவைகள் புணரும்பொழுதும், ஒன்றையொன்று தாக்கி உராயும்பொழுதும் உடல்மேலுள்ள மெல்லிறகுகளைத் தூவுவதால், அவற்றிற்குத் 'தூவி' என்று பெயர்வந்தது. அவற்றைக்கொண்டு செய்த எழுதுகோலைத் 'தூவல்' என்று கூறினர். அம்புபோல் பயன்படும் வலிய பறவைகளின் இறகுகளும் 'தூவல்' எனப்பட்டன. தூவி—தூவல்—இறகு—எழுதுகோல்.

ஆங்கிலத்தில் உள்ள பென் (Pen) எனும் சொல்லும் இக்காரணம்பற்றி வந்ததே.

இலத்தீன் சொல்லாகிய 'Penna' எனும் சொல்லிற்கும் (FEATHER) இறகு என்றே பெயர். இதிலிருந்து பிறந்ததே (Pen) என்ற ஆங்கிலச் சொல்லும்.

அமைச்சருக்கு விண்ணப்பம்

துரை. மாணிக்கம்

மழைக்கென்றும் வெயிற்கென்றும் கூரை யிட்டோம்!
மறைவுக்குச் சுற்றிநெடுஞ் சுவர்கள் வைத்தோம்!
அழைக்கின்ற தென்றலிளங் காற்றுக் கென்றே
அருகருகிற் பலகணிகள் அமைத்தோம் வீட்டில்!
உழைக்கின்றார்; உண்கின்றார் அண்டை வீட்டார்!
ஒருபொருளும் பிறர்பொருளைத் திருடாவாறு
பிழைக்கின்றார்; எனினும் நம் வீட்டிற் கென்று
பெருங்கதவை வைக்கின்றோம்; தாழ்வைக் கின்றோம்!

"கதவை நீ ஏன்வைத்தாய்? நாங்க ளெல்லாம்
கள்ளரென்ற நினைவோ? சுவரேன் வைத்தாய்!
உதவெனக்கு நீ! உனக்கும் உதவு கின்றேன்!
உன்வீடும் என்வீடே! எனதுன் வீடே!
புதுமுறையாய் வாழ்ந்திடுவோம்" என்று நாம்போய்
புதுவீட்டுக் காரரிடம் கேட்டு விட்டால்,
பதிலுரையா கிடைக்கும்? நம் கைகால் போகும்.
பல்விழுகும்! உடலெலும்பு நொறுங்கிப் போகும்!

பிரிவுமனப் பான்மையென்றே அமைச்ச ரெல்லாம்
பிழையாகப் பேசுகின்றார், தமிழ் நாடென்றால்!
பரிவோடு கேட்கின்றோம்; உம்மைப் பெற்றாள்
பழந்தமிழ்த்தாய் ஒருத்தியெனில்; தமிழ்த் தந்தைக்கே
கருவான துணைமையெனில், கருத்தைச் சொல்வீர்!
கன்னித்தமிழ் வடமொழியால் தீங்கு றாதா?
உருவாகும் தமிழ்நாட்டுப் பற்று தீதா?
உழைத்துழைத்துப் பிறர்க்கிட்டு வாழ்தல் நன்றா?

தமிழ்நாடு தமிழர்க்கென் றார்த்தல் தீதா?
தாங்காத கொடுமை பல தாங்கல் நன்றா?
தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வாழல் தீதா?
தாயென்றே அதைநினைத்துப் போற்றல் தீங்கா?
அமிழாத சிறப்பதன்பால் இருத்தல் பொய்யா?
அமைச்சர்தமைக் கேட்கின்றோம்! வரும்நூற்றாண்டில்
உமிழாத நிலைபெறுவீர்! ஒளியாய் வாழ்வீர்!
ஒண்டமிழ்க்குத் துணையாவீர்! அறங்காப் பீரே!

○ ○ ○

பெயர்தெரியாப் புலவர்க்குப் பெயர்கொடுத்த பாக்கள்!

—(வெண்ணெய் வேலன்)—

தமிழ் மருவிய காலந்தொட்டே ஈண்டுறையும் மக்கள் தமிழர் என பெருமைமிக்க சொல்லால் அழைக்கப்பட்டனர். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி'யாகத் திகழ்ந்தவர் தமிழர். தமிழினத்திலிருந்து மொழி வேற்றுமையால் வேறுபட்ட தெலுங்கர், கன்னடர், கேரளர் துளுவர் ஆகிய நான்கினத்தவரும் தொல்குடிமக்கள் என்னலும் சாலும். இம் மக்களுக்கெல்லாம் தாயாக விளங்கிய மொழி தான் உள்ளத்தைக் களிக்கச்செய்யும் செந்தமிழ் என்றால் இதை யாரே மறுக்கவல்லார்! இதை மனோன்மணியம் தந்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் அழகுபடக்காட்டியுள்ள

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்......";

என்ற அடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

முதலிரண்டு ஊழிக்காலத்தே இருந்து வளர்ந்து வரையிலா இலக்கியங்களைத் தந்த தமிழ்க் கழகங்கள் எத்துணையோ — தமிழ்ப்புலவரைத் தம்மகத்தே கொண்டிருந்தன. உலக மக்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டியாக அறநெறி விளக்கமாக விளங்குவோர் புலவர் பெருமக்களேயாவர் என்பது உண்மை. அவரது புலமைக்கு—பாப்புனையும் ஆற்றலுக்கு நிலைக்களமாக நீக்கமற நிற்கும் நெடுந்தமிழே காரணம் என்று சொன்னால் மிகையாகாது. அத்தகைய வளமார் தமிழை வாழவைத்து வளர்த்த பெருமை மூன்று தமிழ்க் கழகங்களைச் சாரும்.

மூன்று கழகங்கள் :

அன்றாண்ட தமிழ் மன்னர் மூவருள் பாண்டியர் தமிழ் வளர்ச்சி கருதி புலவர் பலரை அழைத்து அவைகூட்டி மும்முறை தமிழ்க் கழகங்களை ஏற்படுத்தித் தமிழ் வளர்த்தனர் என்பது காலங்காட்டும் உண்மை. முதற் கழகம் நிறுவிய இடம் தென்மதுரை. அது இன்று கடல்கொள்ளப்பட்டது. அம் முதற்கழகத்தின்கண் அகத்தியர், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள். குன்றெறிந்த முருகவேள், முருஞ்சியூர் முடிநாகனார், நிதியின் கிழவன் முதலாக ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் இருந்தனர். இத்தகைய புலவர் தம்மாற் பாடப்பட்டன பரி

பாடலும். முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் முதலியன. இம் முதற்கழகம் 4440 ஆண்டுகள் தொடர்ச்சியாக நடைபெற்றது. அக்காலத்துப் புலவர் கொண்ட இலக்கண மாவது அகத்தியம்.

இரண்டாவது கழகம் கபாடபுரத்துத் தோற்றுவிக்கப் பெற்றது.

இதனை நிறுவிப் பாதுகாத்தவரும் பாண்டியரே. அவர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மராவர். இதில் தமிழாய்ந்த புலவர் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க்கருங்கோழி, மோசி, வெள்ளூர்க்காப்பியன் போன்ற பெருந்தமிழ்ப்புலவரேயாவர். அவர் தம்மால் பாடப்பட்ட நூல்கள் கலியும். குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும்போன்ற இன்னும் பல நூல்களுமாகும். அக்கால இலக்கண நூற்கள் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம். இக்கழகம் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. பின்பு கடல்கோட்பட்டது. இதனைத் தோற்றுவித்தவர் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மராம். அதில் பல புலவர் தமிழாய்ந்தனர். சேந்தம்பூதனார், அறிவுடையனார், மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் போன்றோருள்ளிட்ட நாற்பத்தொன்பதின்மர். பாடப்பட்ட நூல்கள் நெடுந்தொகைநானூறு; குறுந்தொகைநானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்துவரி, சிற்றிசை, பேரிசை முதலாயினவாம். 'அக்காலை இலக்கண நூலாகத் திகழ்ந்தவை அகத்தியமும், தொல்காப்பியமுமேயாகும்- இக்கழகம் 1850 ஆண்டுகள் நடைபெற்றது.

இம்மூன்று தமிழ்க் கழகங்களின் வரலாற்றினைக் கூறிய நூல் **இறையனார் களவியலுரையாகும்.**

> "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
> விருந்தமிழ்தம் வேண்டிடினும் வேண்டேன்!'

என்று தமிழுக்காகவே பிறந்து வாழ்ந்து வையத்தை நீத்துவிட்ட புலவர் ஏராளம்! ஏராளம்!

> "தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
> நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால—"

என்ற நீதிநெறி விளக்கச் செய்யுளைப் பாடிவைத்த புலவர் அக்காலை வாழ்ந்தனர். இத்தகைய புலவர் பல்லோரின் பெயர்

கள் தமிழுலகுக்குத் தெரிவதற்கு வாய்ப்புத்தந்த பெரியோர்க்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். எனினும் கால வெள்ளத்தாலோ — கரையான்களின் அரிப்பாலோ என்ன காரணத்தினுலோ பல பைந்தமிழ்ப் புலவரின் பெயர்கள் இலக்கிய வரிசையில் இடம்பெறுமைக்குறித்துக் கவலுருமல் இருக்க முடியவில்லை. பெயரற்ற புலவர்க்குப் பெயர்தரும் பான்மையிலே அவர் யாத்துச்சென்ற பாக்கள் உதவிபுரிந்த காரணத்தினுல் நல்லகாலமாக அவர்க்கு ஏதேனும் ஒரு பெயரையாவது வைக்க முடிந்தமைக்கு நூல் தொகுத்து வெளியிட்ட நுண்ணறிவாளர்தமக்குத் தமிழர் என்றென்றும் நன்றி செலுத்த வேண்டிய நிலையிலுள்ளனர். தற்புகழ்ச்சி வேண்டாத புலவர் சிலர் பாக்களை எழுதிவைத்துச் செல்லுங்கால் பெயர் பொறிக்காது விரிதே விட்டிருக்கலாம் எனவும் துணியமுடிகிறது. எது எப்படி இருப்பினும் பாப்புனைந்த புலவர்தம் முழுவரலாற்றையும் தெரிந்துகொண்டுதான் அவர் எழுதிய செய்யுளைப் படிக்க வேண்டும் என்பது சான்ருேர்சாற்றிய நெறியாகும் எடுத்துக்காட்டாக குறள் மறை தந்த வள்ளுவரின் வரலாறு நல்ல முறையிலே கிடைக்கப்பெருத காரணத்தால் எழுகின்ற சொற்போரும் மற்போரும் சொல்லவியலா. அவரைப்பற்றிய வரலாறு ப ல வா ரு க த் திரித்துக் கூ ற ப் ப டு வ து கண்கூடு. அவற்றில் எதை ஏற்பது; எதை விடுப்பது; என்பதிலேயே கருத்தைச் செலவழித்துக் கலங்குவோர் பலர். எது எப்படியாயினும் நமக்கு வேண்டியது கருத்துத்தானே; வரலாற்றைப் பற்றி நமக்கென்ன என்று வாளாயிருந்துவிடுவோர் பலர். அஃதெப்படியாயினும் ஒரு செய்யுளைப் படிக்கின்ருேமென்ருல், அதை யாத்த புலவரின் வரலாற்றை, அவர் வாழ்ந்த காலத்தின் நிலை முதலியவற்றைக் கருத்திற்கொண்ட பிறகு படித்தல்தான் நல்லது. அதுவே தமிழாராய்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் பெருந்துணைபுரிகிறது. இது இலக்கிய வரலாறு கண்ட உண்மை.

தன்னைத்தான் புகழ்ந்துகொள்ளக் கூடாது என்ற காரணத்தினுல் தாஞே என்னவோ தமிழ்க் கழகம் இருந்தகாலை வாழ்ந்த புலனுழுதுண்ணும் புலவர் தங்கள் பெயர்களையும் வ ர ல ா று க ளை யு ம் எழுதிவைக்காமலேயே அரிய பல கருத்துக்களையடக்கி வைத்திருக்கும் அழகுமிக்க செய்யுட்களை அடுக்கடுக்காய் எழுதி அழியாத புகழோடு இந்நிலவுலகில் என்றென்றும் நின்று நிலவுகின்றனர். இவ்வுலகம் வாழ்ந்தால்தான் வாழலாம் என்ற எண்ணமுடைய தமிழ்ப் புலவர் எழுதுவதொன்று செய்வதொன்ருகவா இருக்கும்? இருக்காது. இருக்

கவே இருக்காது. ஏன் இத்துணை ஐயப்பாடு? உள்ளமும் செயலும் ஒத்திருந்தது என்று திடமாகவே கூறுவோமே. இதை யார்மறுப்பர்?

"உடல் பொருள் ஆவியும் உனக்குநான் தந்தேன்
உயர்கநீ ஒண்டமிழ் மொழியே!
கடலளவிங்குப் புலவர் களுள்ளோம்
காத்திட, வாழ்தமிழ் மொழியே!"

என்று தமிழே உயிர், தமிழே உடல், தமிழே உணவு. உடை, உரையுள், பேச்சு, மூச்சு, தமிழே தனது செல்வம், மாடு, மனை, மக்கள், சுற்றம் எனவெண்ணிக் காலமெல்லாம் தமிழ்மொழிக் குழைத்துப் புகழ்பெற்ற செம்மல்களின் பாக்கள், தமிழ்க்கலையும், தமிழ்நெறியும், தமிழ்ப்பண்பும், நாகரிகமும் எடுத்துரைக்க எழுந்த எழுத்தோவியங்கள் பல இன்று எழுதியவரின் பெயர்கள் மறைந்த நிலையிலே காணப்படுகின்றன. என்றாலும் அத்தகையக் கைம்மாறு வேண்டாத கலைமலிந்த மலைகளுக்கு—காலம் வென்ற கருத்துநிறை புலவர்தமக்குப் பெயர்கொடுக்க அவர் எழுதிய பாடல்களே முன்வருகின்றனவென்றால் இதை என்னென்று கூறுவது? கைம்மாறு என்று கூறுவதா? செய்நன்றியென்று செப்புவதா?

தமிழ், புலவர்தம்மால் பெருமைபெற்றது! புலவர் தமிழால் பெருமையுற்றனர் எனும்போது புலவர்தம்மால் புகழடைந்த தமிழன்னை அவர்க்கு ஒரு பெயரைத் தராமலாபோய் விடுவாள்?

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண் டாம்; உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற கருத்தை – அறநெறியைக் கொடுத்த தமிழ்த்தாய் இதைக்கூடச் செய்ய முன்வரமாட்டாளா என்ன? தமிழன்னை புலவர்க்கு — பெயரற்ற புலவர்க்கு அப்புலவர் எழுதிய பாடலில் உள்ள ஒரு சொல்லையே எடுத்துவைத்துப் பெயர் சூட்டியுள்ளதைப் பார்ப்போமாக.

(தொடரும்)

உடலைப்பற்றி........!

இரும்புப் பொறிகட்கு எண்ணெய், நிலக்கரி முதலிய எரிபொருள்கள் தேவைப்படுதலைப்போல், மாந்தன் உடலுக்கும் உணவு தேவை. மாந்தனின் வயிறு ஓர் அடுப்பைப்போலவே வேலை செய்கின்றது. அடுப்பிலே கொஞ்சம் சருக்கரையைப் போட்டவுடன் எவ்வளவு சூடு ஏற்படுமோ அவ்வளவு சூடே வயிற்றுக்குள் சருக்கரை போனவுடனும் எற்படுகின்றது.

நம் உடலுட் புகும் உணவு சருக்கரையாக மாறுகின்றது. சருக்கரை, புளிங்காடி ஆகிறது. புளிங்காடி வெடித்து, நம் தசைகளை இயக்கு கின்றது.

மாந்தனின் நெஞ்சாங்குலை ஒரு துருத்திபோல் இயங்குகின்றது. அது குருதியைத் தூய்மைப்படுத்துவதுடன் உயிர்வளியை வீசுகின்றது. அது ஓய்வின்றி அவன் ஆயுட்காலத்திற்குள் ஏறத்தாழ இருநூற்றைம்பதுகோடி முறைகள் சுருங்கி விரிகின்றது. உடலிலுள்ள குருதியைத் தூய்மைசெய்து, கழிவு நீரை வெளியேற்ற சிறுநீர்க்காய்கள் பயன்படுகின்றன. நெஞ்சாங்குலை எப்பொழுதும் ஏழரைக்குப்பி (ஒன்றேகால் காலன்) அளவுள்ள குருதியை இறைத்துச் சுழலவிடுகின்றது. முன் தேவையாக மண்ணீரல், கல்லீரல் முதலிய உறுப்புக்களில் குருதி தேக்கி வைக்கப்படுகின்றது.

உடலில் உள்ள குருதியில் சூடு மிகுந்தால் பிதற்றல் ஏற்படும். குளிர்ச்சி மிகுந்தால் இறக்கும்போதுகூட உள்ளம் இன்பமாகவே இருக்கும். குருதியில் உள்ள உயிர்வளியை வெளியேற்றினுல், மாந்தன் பகுத்தறிவை இழக்க நேரிடும். அதில் உள்ள சுண்ணும்புச் சத்தில் அரைப்பங்கை நீக்கினுல் நினைவுதப்பி தளர்வு உண்டாகி, உயிர்துறக்க நேரிடும். அதே சுண்ணும்புச்சத்தை தேவையான அளவின் இரண்டு மடங்காக்கினுல் குருதி தடித்துப்போய் ஓட்டம் நின்றுவிடும்.

நல்ல உடலில் எப்போதும் 98·6 பாகை சூடு இருக்கும். உட்கார்ந்து எழுதுவதைவிட கடின வேலைகள் செய்யும்போது சூடு மிகவும் செலழிகின்றது. உடல், தன் சூட்டை வெயர்வையினுல் ஒரே சீராய் வைத்துக்கொண்டிருக்கின்றது.

வயிறு புடைக்கத் தீனியுண்டாலும், ஊட்டச்சத்துப் பயன்படுதலின்றி உடல் மெலிந்தே போகும். உடலில் சில தேவையில்லாத கருவிகளும், நெடுங்காலத்துக்கு முன்பே மறைந்திருக்கவேண்டிய கருவிகளும் இருக்கின்றன.

LOVING HEARTS.

Were they relatives your and my mother ?
How they Kinmen your and my father ?
Had we Known each other ourselves before ?
None, none, but now we met therefore
As the water rains mixes with red clay
Your and my loving hearts mingled, themselves they!

(Translated into English from Kurunthogai 40.)

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

— By, K. RUDRAKOTI.

மாந்தன் நான்கு கால்களால் நடந்தபொழுது உச்சி மண்டையில் ஒரு கண் இருந்தது. பின் இரண்டு கால்களால் நடக்கக் கற்றபொழுது, அது தேவையற்றுப்போய், இப்பொழுது மண்டைக்குள்ளே ஒரு சுரப்பியாக இருக்கின்றது. முதுகெலும்பின் கீழ் துனியில் உள்ள குறுகிய வாலும் அப்படி அமைந்ததே.

மாந்தனின் மூளை வளர்ந்து விரிவடைந்து கொண்டே இருக்கின்றது. பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் இருந்த உயிர்களுக்கு உள்ள மூளை அமைப்பைவிட இப்போழுது உள்ள உயிர்களின் மூளை அமைப்பு வளர்ச்சி அடைந்திருக்கின்றது.

இன்னும் ஐநூறாயிர மாண்டுகட்குப்பின் உள்ள மாந்தன் நம்மைவிட எல்லா வகையிலும் உயர்ந்திருப்பான். நம் மூளையை விட இருபத்தைந்து மடங்குள்ள பெரிய மூளை அவனுக்கு இருக்கும் என்று அறிவியல் நூலார் கருதுகின்றனர்.

'தென்மொழி'

தமிழுக்குத் தரும் புத்திலக்கியம்!

அறு பருவத் திருக்கூத்து!

துரை. மாணிக்கம்
எழுதும்
இனிய தொடர் பாடல்

அருமையான பருவ இலக்கியம் !

ஒவ்வொரு பருவத்திலும் நானிலத்தே காணும் இயற்கை எழில், மக்கள் நடப்பு, முதலியவற்றைச் சுவை பொதுள, நூறு நூறு அடிகளான் பண்டைய இலக்கிய மரபு கெடாமலும், புதுமை நிகழ்ச்சிகள் விரவி வரவும் இனிமையாகச் சமைத்த இலக்கிய நூல். தமிழில் பருவநூல் இல்லாத ஒரு குறையை நிறைவு செய்கின்றது.

விரைவில் தென்மொழியில் தொடரவிருக்கின்றது.
இலக்கியத் தும்பிகட்கு இனிய நறவு !
பாடல் வேட்பார்க்குக் கனிந்த பழக்குலை !
நெடிய இன்பங் கேட்பார்க்கு நிலாச்சோறு !

இன்றே உறுப்பினராகுங்கள்.

"தென்மொழி"

நெல்லிக்குப்பம். (தெ. ஆ' மாவட்டம்,)

இலக்கியம்

அரசியல்

மொழியாராய்ச்சி

அறிவியல்

நூல்களை

நல்லமுறையில்

வெளியிடுகின்றோம்.

வள்ளுவர் படிப்பகம்

நெல்லிக்குப்பம்,

(தெ. ஆ.)

தமிழ்நாடு.

தென்மொழி

விளம்பரக் கட்டணம்.

—

அட்டை நான்காவது பக்கம்
முழுமையும் ரூ. 50-00
,, இரண்டாவது
அரைப்பக்கம் ரூ. 25-00
,, மூன்றாவது
முழுப்பக்கம் ரூ. 40-00
,, அரைப்பக்கம் ரூ. 20-00
உள்ளே முழுப்பக்கம் ரூ. 30-00
,, அரைப்பக்கம் ரூ. 15-00
,, கால்பக்கம் ரூ. 8-00

வரி விளம்பரங்களுக்குத் தனியே எழுதவும்.

அமைச்சர்
தென்மொழி
நெல்லிக்குப்பம்,
தெ. ஆ.மாவட்டம் (தமிழ்நாடு)

உங்கள் நிறைவே எங்கள் நிறைவு!

சிறு அறிக்கைகள்

முதல்

நூல்கள் வரை

தெளிவாகவும் எடுப்பாகவும்

அச்சிட்டுத் தருகின்றோம்

உறுதியானநூற் கட்டடங்களும்

(Binding)

குறித்த காலத்தில் செய்து தரப்படும்

குரு அச்சகம்

நெல்லிக்குப்பம்.

பதிவு எண்: எம்.7211.

தென்மொழி
பொங்கல் இதழ்

கருத்துக் கருவூலமாக வருகின்றது.

மொழிப்பேரறிஞர்
ஞா. தேவநேயப் பாவாணர், எம், ஏ.

பண்டாரகர்
மா. இராசமாணிக்கனார், எம், ஏ., எம். ஓ. எல்.

வரலாற்றுப்பேராசிரியர்
தி, வை. சொக்கப்பா, எம், ஏ.,

முத்தமிழ்க் காவலர்
கி, ஆ பெ. விசுவநாதம்

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,

மா, இலெனின், பி,ஏ., பி.டி.

மாரி. அறவாழி

துரை. மாணிக்கம்

மற்றும் பலர் எழுதுகின்றனர்.

பிறவிளக்கங்கள் அடுத்த இதழில்!

தென்மொழி நெல்லிக்குப்பம்.

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா செகந்நாதன் அவர்களால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டுப், பெருஞ்சித்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது.